அவர்களுடைய அரசு பேருந்துகளை இயக்குவதற்கு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்றைய தினம்தான் கொடுத்திருக்கிறீர்கள். அதை அதிகாரிகளிடம் கொடுத்திருக்கிறேன். தட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, தேவைப்பட்டால் நிச்சயமாக பேருந்து விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) வேலூர் பாராளுமன்றத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்த நிலையில், வேலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை போதை மீட்பு மையத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யும் அறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் வேலூர் நாடாளுமன்றத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டிருக்கிறது. Election Commission–ஆல் அறிவிக்கப்பட்டிருக்கிறது. Election Commission–ஆல் தேதி அறிவிக்கப்பட்டவுடன் Code of Conduct தானாக அமலுக்கு வந்துவிடுகிறது. இங்கேகூட கைத்தறித் துறையில் ஒரு கேள்வி வருகின்றபோது அந்தத் துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுவிட்ட காரணத்தால் Code of Conduct அமலுக்கு வந்துவிட்டது. அதனால் இப்போது அது முடியாது என்று விளக்கம் சொல்லியிருக்கிறார். ஏற்கெனவே Election Commission–ல் தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. "The Model Code of Conduct shall come into force with immediate effect in the district in which the whole or any part of Parliamentary Constituency going for election is included" என்று தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நேற்றைய தினம்

மின்சாரத் துறை மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்திற்கு பதிலளித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது இங்கே அறிவிப்புகளையெல்லாம் வெளியிட்டிருக்கிறார்கள். ஆக, அந்த அறிவிப்புகளிலே ஒன்றாக கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி, மதுரை, திருச்சி, தஞ்சாவூர், வேலூர் ஆகிய ஏழு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் அமைந்துள்ள போதை மீட்பு மையங்களுக்கு 3.64 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறிய செயலாக இருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட அறிவிப்புகளை வெளியிடுவது முறையா என்பதைத் தங்கள் வாயிலாக நான் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 11–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை குறித்த மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் நேற்று காலையிலேயே ஆரம்பித்துவிட்டது. வேலூர் பாராளுமன்றத் தேர்தல் தேதி அறிவிக்கப்படும் என்பது எங்களுக்குத் தெரியாது. துறை குறித்த அறிவிப்புகள் ஏற்கெனவே தயார் செய்யப்பட்டு, நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. இனிமேல் வருகின்ற காலங்களில்தான் இத்தகைய அறிவிப்புகளை நிறுத்த முடியும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) நேற்றே அறிவிக்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் சம்பந்தப்பட்ட அந்த அறிவிப்பினை மட்டும் நிறுத்தி வைத்துவிடுகிறோம்.*

(ஆ) சேலம் உருக்காலையை தனியாருக்கு ஒப்படைக்கும் முயற்சி குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் உருக்காலையை தனியாருக்குத் தாரை வார்க்கக்கூடிய வகையில், உலகளாவிய* tender *விடப்பட்டுள்ளதாக*